IX.—NON-OFFICIAL BUSINESS.

AMENDMENT TO THE CONDUCT OF ELECTION OF MEMBERS OF VILLAGE PANCHAYATS RULES, 1964

SRI M. KALYANASUNDARAM: Sir, I move that the following amendments be made to the Conduct of Election of Members of Village Panchayats Rules, 1964 issued in G.O. Ms. No. 1986, Rural Development and Local Administration, dated 25th September 1964, published in the Extraordinary issue of the *Fort St. George Gazette*, dated 28th September 1964 and circulated to the Members on the 20th November 1964.

Amendments.

In the Conduct of Election of Members of Village Panchayats Rules, 1964—

1. In Rule 2—

For sub-rule (4), the following sub-rule shall be substituted, namely :—

" (4) The notice shall be publicised by beat of drum again in the ward or each of the wards concerned on the day previous to the date fixed for the poll ".

2. In Rule 5—

For sub-rule (1), the following sub-rule shall be substituted, namely :—

5 *Presentation of nomination papers* : " (1) Nomination of candidates shall be made in writing on the date and between the hours specified by the Returning Officer in this behalf in the notice under Rule 2(2), such date being not later than seven days previous to the date fixed for poll ".

கிராம பஞ்சாயத்து விதிகளுக்கு நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தங்களைப் பற்றி முதலிலேயே விளக்கி விடுகிறேன். பஞ்சாயத்துத் தேர்தல்கள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன என்று சொல்லலாம். நகர பஞ்சாயத்து களுக்கு நாமினேஷன்கள் கோரப்பட்டு ஃபைல் பண்ணி, அதிலே இருக்கக் கூடிய பிரச்னைகளும் தெரிந்த விஷயம். இவ்வளவு பெரிய பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவது கொஞ்சம் கஷ்டம்தான். 15,000 பஞ்சாயத்துக்கள், நகர பஞ்சாயத்துக்கள் எல்லாவற்றுக்கும் தேர்தல் நடத்துவது என்பது கிட்டத்தட்ட பொதுத் தேர்தல் போல இருக்கிறது என்றும் இதிலுள்ள கஷ்டங்களை உணராமல் இல்லை. விதிகள் பிறப்பித்திருப்பதில் இன்னும் கொஞ்சம் நன்ருக ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்து பிறப்பித் திருக்கவேண்டும். விதிகளிலே கோளாறுகள் என்னென்ன இருக் கிறது என்று சொல்லுவதற்கு ஒரு சில உதாரணங்களும் கொடுக்க விரும்புகிறேன். நகர பஞ்சாயத்து விதிகளில் ஆங்கிலத்தில் இருப்பது டெப்பாஸிட் கொடுக்க வேண்டியது 20 ரூபாயும், 5 ரூபாயும் என்று இருக்கிறது. தமிழில் " ஒரு வார்டில் தேர்த

22nd January 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

லுக்கு நிற்கும் அபேட்சகர் 8-வது விதியின் (2) துணை விதியின் கீழ் நியமனச்சீட்டு சேர்ப்பிக்கும் காலத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஐம்பது ரூபாய் ரொக்கத் தொகையை அல்லது அவர் அட்டவணையில் கண்டுள்ள ஜாதியை அல்லது மலை ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தால் இருபத்தைந்து ரூபாய் ரொக்கத் தொகையை டிபாசிட் செய்தாலொழிய அல்லது டிபாசிட் செய்வித்தாலொழிய அந்த அபேட்சகர் கிரமமாக நியமனம் செய்யப் பெற்றிருப்பதாகக் கருதப்படமாட்டார்," என்று இருக்கிறது. தமிழிலே மொழி பெயர்த்ததிலே ரூ. 20, ரூ. 50 ஆகிவிட்டது, ரூ. 5 ரூ. 25 ஆகிவிட்டது. தமிழிலே மொழி பெயர்ப்பதற்குள்ளே அப்படி ஆகிவிட்டது. இப்படி விதிகளைப் பிறப்பித்து, இவ்வளவு தூரம் அஜாக்கிரதையாக இருக்கமுடியுமா ஒரு டிபார்ட்மெண்டுக்கு, என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

குறிப்பாக, கிராமப் பஞ்சாயத்து தேர்தல் பற்றி முதலிலே பிறப்பித்த விதியின்படி 24 மணி நேரம் தான் டைம் கொடுக்கப் பட்டது. முதல் நாள் நாமினேஷன் செய்யவேண்டும். அன்று இரவே வாபஸ் பெற விரும்புகிறவர்கள் வாபஸ் பெற வேண்டும். மறுநாள் தேர்தல் நடக்கும். ஒதுக்கப்பட்டிருக்கிற சின்னங்கள் என்ன என்று தெரிந்துகொள்வதற்குக்கூட அபேட்சகர்களுக்கும் வாய்ப்பு கிடையாது, மக்களிடம் சென்று சொல்லுவதற்கு வாய்ப்பு கிடையாது. இப்பொழுது ஏதோ பெரிய மனது பண்ணி ஒரு நாள் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். தேர்தல் சின்னங்கள் என்ன என்று புரிந்துகொள்ள வேண்டாமா? தேர்தல் நடப்பதற்கு முதல் நாளாவது புரிந்துகொள்ள வேண்டாமா? எல்லா கட்சியினருக்கும் தானே அந்தக் கஷ்டம் என்று சொல்லலாம். ஏதோ ஒரு கட்சிக்கு சலுகை காட்டுவதற்காக அப்படிச் செய்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அபேட்சகர்களாக நிற்பவர்களுக்கு சின்னங்கள் தெரிய வேண்டாமா? கிராம மக்களுக்கு சின்னங்கள் என்ன என்பதே தெரியாது. அதைப்பற்றி பத்திரிகைகளிலும் பிரசுரிக்கவில்லை. (ஒரு கனம் அங்கத்தினர் : இன்று காலையிலே பத்திரிகையிலே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது). ஒரு வேளை நான் கவனிக்காமல் இருந்திருக்கலாம். சின்னங்கள் என்ன வரிசையிலே வைத்திருக்கிறார்கள் என்பதை ரகசியமாக வைத்திருக்கிறார்கள். சின்னங்கள் வரிசையை தெரியப்படுத்தினால் என்ன? பேலட் பேப்பரைப் பொறுத்தவரையில் இங்கே பிரிண்டு செய்து அதிகாரிகளின் மூலம் அனுப்புகிறார்கள். அந்தந்த ஜில்லாவில் பேலட் பேபர் அடிக்காமல், இங்கிருந்து அச்சடித்து விநியோகம் செய்வது நல்லது தான். இல்லாவிட்டால், பாலட் பேபர்களைக் கூட சிலர் அச்சடித்துவிடுவார்கள். ஜாக்கிரதையாக இருப்பது நல்லதுதான். ஆகவே, ஒரே இடத்தில் அச்சடித்து அனுப்புவதை நான் வரவேற்கிறேன். ஆனால், சின்னங்கள் எந்த வரிசையில் இருக்கும் என்பது தெரியாது. இருக்கக் கூடிய வரிசையில் ஏன் பிரசுரிக்கவில்லை? அப்படி பிரசுரிக்காவிட்டால், வாக்காளர்களுக்கும், அபேட்சகர்களுக்கும் மிகவும் சங்கடமாக இருக்கும். இம்மாதிரி விதிகளை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்தினால்,

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [22nd January 1965

தேர்தலின் நோக்கமே நிறைவேறுவது கஷ்டமாகப் போய்விடும். அதனால்தான் நான் இந்த விதிகளுக்குத் திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறேன். சட்டசபை அதிக நாட்கள் கூடவில்லை. அதனால் திருத்தங்கள் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை. சந்தர்ப்பம் வந்தபொழுதெல்லாம்கூட இதைப்பற்றி சொல்லி இருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூட சொல்லி யிருக்கிறேன். டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்களில் கூட இந்தப் பிரச்னையைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னால் இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருந்தால், ஒருவேளை அமைச்சர் அவர்கள் அவைகளை ஏற்றுக் கொண் டிருப்பார்களோ என்னவோ நிச்சயமாக தெரியாது. ஜனங் களைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? அவகாசம் கொடுத்தால் சண்டை போட்டுக்கொள்வார்கள் என்று ஏன் பயப்படவேண்டும்? ஜனங்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். ஜனங்கள் அவ் வளவு பண்பு பெற்றவர்கள் இல்லையா? ஜனங்களுக்கு யாரை எப்படி தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது நன்றாகத் தெரியும். பணம் வாங்கிக்கொண்டு பணம் கொடுத்தவர்களுக்கு வோட்டுப் போடாமல் நாமம் போடுவதற்குக் கூட கற்றுக்கொண்டிருக்கிறார் கள். ஜனங்கள் மீது நம்பிக்கை வேண்டும் ஜனநாயகத்தில். ஜனங்களுக்கு யாரை தேர்ந்தெடுக்கவேண்டும், எப்படி தேர்ந் தெடுக்க வேண்டும் என்பது தெரியும். ஜனங்களுடைய அறிவு ரொம்பவும் வளர்ந்துவிட்டது. அவர்கள் நல்ல அனுபவம் பெற்று விட்டார்கள். யாரிடமும் அவர்கள் ஏமாந்து போகமாட்டார்கள். அவர்களை நம்பவேண்டும். ஜனங்களைக் கண்டு பயப்படக்கூடாது. 1952-வது ஆண்டில் தேர்தலைப் பார்த்தோம், 1957-லும் பார்த்தோம். பிறகு 1962-லும் பார்த்தோம். தேர்தல் நடக்கக்கூடிய சமயங் களில் எவ்வளவோ சூழ்நிலைகள், அபாயகரமான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. நாடு பூராவும் தீவிரமாக, தேர்தல் பிரசா ரம் நடந்திருக்கிறது. ஆனால், அதிருஷ்டவசமாக நமது நாட்டில் பாகிஸ்தான் அல்லது மற்ற ராஜ்யங்களில் நடப்பது போல் கலவர மோ அல்லது கலகமோ அல்லது விரும்பத் தகாத நிகழ்ச்சியோ ஏற்படவில்லை. ஏற்படாது என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது. நமது நாட்டு மக்களுக்கு பண்பு குறைவு இல்லை. ஜனங் களை நம்பக்கூடாது, அவர்களுக்கு போதுமான அவகாசம் கொடுக்கக்கூடாது என்று நினைப்பது தவறு. போட்டியையே தவிர்க்கவேண்டும் என்று சொல்லலாம். ஆனால், அந்த லட்சியத் தை எப்படி நிறைவேற்ற முடியும்? பஞ்சாயத்து தேர்தலில் அரசி யல் இல்லை, அரசியல் கட்சி சார்பிலே தேர்தலில் நிற்கவில்லை என்று சொன்னாலும், பின்னால் ஜெயித்த பிறகு உங்களுடைய பஞ் சாயத்து, எங்களுடைய பஞ்சாயத்து என்று சொல்லி, தங்கள் தங்கள் கட்சிக்கு ஆள் சேர்ப்பதற்கு பார்க்கிறார்கள். பஞ்சாயத்து தேர்தலில் அரசியல் இல்லை என்றால், அதை என்னால் நம்பமுடிய வில்லை. அப்படி நினைத்தால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்பவர் களாகத் தான் ஆவோம். தேர்தல் நடத்துவதில் நிர்வாக கஷ்டங் கள் இருக்கின்றன, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இதில் அரசியல் இல்லை என்று சொன்னால் அதை நம்புவதற்கில்லை. தேர்

22nd January 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தலுக்கு முன்னுலே சண்டை நடப்பதும், பின்னுல் அவரவர்கள் கட்சிக்கு ஆள் சேர்த்து பஞ்சாயத்துக்களை திரட்டுவதும் தகராறுகள் நடப்பதும் இருக்கத்தான் செய்யும். என்னுடைய அபிப்பிராயம் பஞ்சாயத்து எலெக்ஷனில் அரசியல் இல்லை என்று கருதக்கூடாது. ஜனங்களுக்கு போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும்.

நான் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். ஒன்று தேர்தல் நடக்கக்கூடிய தினத்திற்கு முந்திய நாளன்று டாம் டாம் போட்டு கிராமங்களில் தேர்தல் நடக்கப்போவதை மக்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்பது. இன்னென்று, அபேட்சகர்கள் நியமனம் தாக்கல் செய்வது தேர்தல் தினத்திற்கு 7 தினங்களுக்கு முன்னதாக இருக்க வேண்டும் என்பதும் தான். அபேட்சகர்கள் வாபஸ் பெறுவது போன்றவைகளுக்கு அவகாசம் ஒதுக்கி, குறைந்தது 5 நாட்களாவது ஜனங்களுக்கு அவகாசம் கிடைக்கவேண்டும் என்பது தான் கருத்து. தேர்தலைப்பற்றி ஜனங்கள் தெரிந்து கொள்வதற்கு அவகாசம் வேண்டும். இதற்காகத் தான் இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். இந்த இரண்டு திருத்தங்களும் அவசியமானவை. தேர்தல் நடப்பதுபற்றி விளம்பரம் செய்வதற்கு பயப்படுவானேன்? டாம் டாம் போட்டு தேர்தல் நடப்பதை ஏன் ஜனங்களுக்கு தெரிவிக்கக்கூடாது? முதலிலே இருந்த விதியின்படி ஒரு வார்டில் தேர்தலை முடித்துக்கொண்டு, அதே அதிகாரி அடுத்த வார்டுக்கும் போய் தேர்தல் நடத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நல்ல வேளையாக அது இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் தேர்தல் நடத்தவேண்டும் என்று இப்பொழுது போடப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஒரு வார்டில் தேர்தலை முடித்துவிட்டு அதே அதிகாரி இன்னொரு வார்டுக்கும் போய் தேர்தல் நடத்தவேண்டும் என்று சொல்லுவது தவறு. குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்தால் வோட்டு அளிக்கலாம் என்று அவகாசம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் தேர்தல் நடப்பதே வாக்காளர்களுக்கு தெரியாமல் போய்விடலாம். முடிவுகள் எடுத்த பிறகு விதிகளை எழுதினர்களா அல்லது விதிகளை முன் கூட்டியே எழுதி வைத்து விட்டார்களா என்று புரியவில்லை. யோசனை பண்ணி எழுதினர்களா என்று தெரியவில்லை.

"The Presiding Officer will preside over the meeting" என்று சொல்லப்பட்டிருக்கிற ஒரு விதியில். எங்கே மீடிங் இருக்கிறது? வாக்காளர்கள் வந்து வோட்டு போடவேண்டியது, அவ்வளவு தானே? பொதுக் கூட்டம் ஒன்றும் நடப்பதில்லை. தேர்தல் தான் நடக்கிறது. இம்மாதிரி விதி ஆங்கிலத்தில் இருக்கிறது. இலாகா அதிகாரிகள் பஞ்சாயத்து தேர்தலைப்பற்றி நன்ருக அறிந்துகொண்டு, கூடி, பூரணமாக கலந்து பேசி, சிந்தித்து நடவடிக்கை எடுக்கவில்லை. அதனுல் தான் இம்மாதிரி விதிகளில் கோளாறுகள் இருக்கின்றன. நான் சுட்டிக்காட்டிய கோளாறுகளை திருத்திக் கொள்ளவேண்டும். வார்த்தையில் இருக்கக்கூடிய தவறுகளையும், எண்ணிக்கையில் இருக்கக்கூடிய தவறுகளையும்

திருத்திக்கொள்ள வேண்டும். இன்னும் 4, 5 நாட்களில் எப்படி விதிகளை மாற்றுவது என்று அமைச்சர் அவர்கள் கூறலாம். இனி யாவது அவசரப்பட்டு செய்து இப்படி கோளாறுகள் ஏற்படக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத் தான் நான் திருத்தங் களைக் கொடுத்திருக்கிறேன். நான் சொல்லக்கூடிய திருத்தங் களை ஏற்றுக்கொண்டு இப்பொழுது நடக்க இருக்கும் பஞ்சாயத்து தேர்தல்களை பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், பஞ்சாயத்து தேர் தலில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தான் இந்தத் திருத்தங்களைக் கொடுத்து பேசி னேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் சட்டமன்றத் தலைவர் அவர் களே, திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தங்களை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக பாராளுமன்ற, சட்டமன்ற தேர் தல்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஜனநாயக உரிமைகள் கூட கிராமப் பஞ்சாயத்து தேர்தல்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை இப்பொழுது இருக்கிற சட்டத்தின் மூலமாகவே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மற்ற பல தேர்தல்களில் எல்லாம் அதிக நாள் அவகாசம் கொடுத்து தேர்தல்களை நடத்தி வருகிறோம். முன்பெல்லாம் பஞ்சாயத்து தேர்தல்கள் கூட சில நாட்கள் அவகாசம் கொடுத்து நடைபெற்று வந்தன. அப்படி இருந்த சில முறைகள் இப்பொழுது மாற்றப்பட்டிருக்கின்றன. அதாவது, 5 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றிருந்தால், 10 அபேட்சகர்கள் நின்றால், 5 அங்கத்தினர்களுக் குரிய வாக்குச் சீட்டுகள் ஒருவரிடம் கொடுக்கப்பட்டால், அவர் ஒரே பெட்டியில் 5 வாக்குகளைப் போட்டாலும், 5-ம் செல்லும் என்ற நிலைமை சென்ற கிராம பஞ்சாயத்து தேர்தல்களில் இருந்து வந்தது. அந்த முறை இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது. விரும்பத்தக்கது தான். இப்பொழுதிருக்கிற முறைப்படி சின்னங் கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு சின்னங்கள் இல்லை. அந்தச் சின்னங்களும் எப்படியிருக்கிறதென்றால், இப்படி ஒரே தாளில் ஒன்றின்கீழ் ஒன்றாக இரு பக்கங்களிலும் அச்சடிக்கப்பட் டிருக்கிறது. (கனம் அங்கத்தினர் சின்னங்கள் அச்சடிக்கப்பட்ட ஒரு தாளை சபையில் எடுத்துக் காண்பித்தார்) இது சர்க்காருக்கு அதிகச் செலவாகும் என்ற காரணத்தாலே 25 பேர்கள் என்று வரை யறுத்து அச்சடிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே 30 பேர் கள் ஒரு பஞ்சாயத்தில் நின்றுவிட்டால் என்ன செய்வது என்று நான் கேட்டேன். ஒரு புது முறையை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அது என்ன என்று வெளியிடப்படவில்லை. அதைச் சமாளிப்பதற்கு எங்களிடத்திலே கருவிகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சின்னங்கள் இரண்டு பக்கங்களிலும் இருப்பது சரியல்ல.

அடுத்தபடியாக இப்பொழுது போதிய அவகாசம் கொடுக்கப் படவில்லை அவகாசம் கொடுப்பதாக இருந்தால், ஒரு வருஷத்திற்கு முன்பே கிளாஸ் 1 பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பது

22nd January 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

போல கொடுத்திருந்தால் இந்தச் செலவைத் தடுத்திருக்க முடியும். மொத்தம் 22 பேர்களுக்கு பத்துப் பேர்கள் நிற்கிறார்கள் என்றால் இந்தச் சின்னங்கள் போட்டிருக்கும் தாளில் கீழே யிருந்து மேலே வெட்டிவிட வேண்டும். அந்த முறையில் அச்சடித் திருக்கிறார்கள். ஏழு பேர்கள் நின்றால் மேலேயிருந்து கீழே வெட்டிவிடவேண்டும். பத்துப் பேர்கள் நின்றால் அதைத் தலை கீழாகப் புரட்டி வெட்டிவிட வேண்டும். ஒற்றைப்படையில் இருந்தால் மேலேயிருந்து கீழே, இரட்டைப்படையில் இருந்தால் கீழேயிருந்து மேலே வெட்டிவிடவேண்டும். நான் ஏதோ மீறிப் பேசுகிறேன் என்று கருதக் கூடாது. பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது, காந்தியார் கண்ட கிராம ராஜ்யம் வந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் உரிய முறையில் அவைகள் நடத்தப்படவில்லை என்பதற்கு பல குற்றச் சாட்டுகள் சொல்ல முடியும்.

MR. SPEAKER : The hon. Member can refer to these in the Budget discussion.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: எங்கள் ஊரிலே இரண்டு வார்டு களிலே இருக்கிற ஜனங்களை நீக்கியிருக்கிறார்கள். ஓட்டர்களில் பாதிப்பேரை நீக்கியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்கள். அப்படி உயிரோடு இருக்கிறவர்கள் அத்தனை பேரையும் இல்லையென்று ஏன் காண்பித்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அது கிளரிக்கல் மிஸ்டேக் என்று சொல் கிறார்கள். ஏறத்தாழ 200 பேர்களுக்குள்ள உரிமை பறிக்கப் பட்டது. ஆனால் செய்த காரியம் ஒரு கிளரிக்கல் மிஸ்டேக். முன் பெல்லாம் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு இந்த ஜாபிதா பப்ளிஷ் செய்யப்பட்டதால் அவகாசம் இருந்தது. ஆனால் இப் பொழுது 10-ம் தேதிக்கு முன்னால் செய்யமுடியாது என்று சொல் கிறார்கள். பப்ளிஷ் பண்ணின பிறகுதான் என்ன தவறுகள் இருக் கின்றன என்பதைப் பார்த்துச் சொல்லமுடியும். ஆகவே, ஒரு வாரம் அவகாசம் கொடுப்பது மிகவும் அவசியம். அதை இப் பொழுதே கொடுத்தால் நலமாக இருக்கும்.

கனம் சபாநாயகர்: இப்பொழுது எப்படிக் கொடுக்கமுடியும்?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: முன்பு ஆல்பபடிகல் ஆர்டரில் இருந்தது. எல்லாவற்றையும் மிகவும் சாமர்த்தியமாகச் செய் திருக்கிறார்கள். ஆல்பபடிகல் ஆர்டர் எல்லாம் இப்பொழுது போய்விட்டது. ஜனநாயகத்திற்கு ஒவ்வாத முறையில் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்துகளை பைஃபர்கே ஷன் பண்ணுவதிலே ஆர்.டி.எல்.ஏ. இலாகாவிலிருந்து 10-ம் தேதி "பிரி" என்று உத்தரவு வருகிறது. மறுபடியும் 12-தேதி 'பிரிக் காதே' என்ற ஒரு உத்திரவு வருகிறது. அவகாசம் கொடுக்கா ததினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆள் தாட்சண்யத்திற் காகவோ அல்லது கட்சி தாட்சண்யத்திற்காகவோ, இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறதோ என்று நினைக்கும்படியாக இருக்கிறது. கட்சியைப் பார்த்து பயப்படவேண்டிய அவசியமில்லை. ஆகவே,

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1965

இதை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆர்.டி.எல்.ஏ. இலாகாவில் 1962-ல் ஒரு ஜி.ஓ. (என் 2260) பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவின் காப்பி ஒன்றை நாங்கள் கேட்டோம். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் போய்ச்சொன்னேம். இன்னும் அந்த உத்திரவின் காப்பி எங்களுக்குக் கிடைக்கவில்லை; தங்கள் மூலமாக இது சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்னையை கிளப்பித்தான் ஆகவேண்டுமோ தெரியவில்லை. அந்த ஜி.ஓ. கான்பிடன்ஷியல் இல்லை. ஆனால், இப்பொழுது அது கான்பிடன்ஷியல் என்று ஒரு வேளை சொல்லலாம். எங்களுக்கு அந்த ஜி.ஓ.-வின் காப்பி கிடைக்கவில்லை. எங்களுடைய உரிமை பறிபோவதாக இருக்கிறது.

MR. SPEAKER : Has it not been published in the Gazette?

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கெஜெட்டில் வந்ததாகத் தெரியவில்லை. நாங்கள் எழுதிக்கொடுத்தோம். இன்னும் காப்பி கிடைக்கவில்லை. வில்லேஜ் பஞ்சாயத்துக்களைப் பொறுத்துத்தான் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு வாரம் அவகாசம் இருக்கிறது. நாமினேஷன் ரிஜெக்ட் செய்யப்பட்டால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் சொல்லி அதற்குமேல் ஹைகோர்ட்டுக்கு வரலாம். ஆனால், மைனர் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் 31-ஆம் தேதி நாமினேஷன் என்றால், 1-ஆம் தேதி ஸ்குரிட்டினி, இரண்டாம் தேதி எலக்ஷன். 1-ஆம் தேதி ஸ்குரிட்டினி ஆனவுடன் நாமினேஷன் ரிஜெக்ட் செய்யப்பட்டால் ரெவின்யு டிவிஷனல் ஆபீசரிடம் சென்று அப்பீல் செய்வதற்கு அதிகாரம் இல்லை. நேரே ஹைகோர்ட்டுக்கு வரவேண்டும். 1-ஆம் தேதி நாமினேஷன் ரிஜெக்ட் ஆனபிறகு அதற்கு காப்பி கேட்டால் நாளைக்குத் தருகிறேன் என்று அதிகாரிகள் சொல்வார்கள். அதற்குள் தேர்தலே முடிந்துவிடும். கோர்ட்டிலே ரிட் போட்டு வாங்குவதற்கும் உரிமை கிடையாது. இந்தச் சட்டத்தின் காரணமாக அந்த உரிமையெல்லாம் பறிக்கப்பட்டிருக்கிறது. இது பல ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்ட சட்டம். அப்பொழுது நான் இங்கே இருந்தால் இதை எடுத்துச் சொல்லியிருப்பேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் இங்கே வந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டனவே.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது தினந்தினம் சட்டத்தை மாற்றுகிறார்கள். ஒரு வாரம் அவகாசம் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று கேட்டுக்கொள்வதுடன் எங்களுக்கு இந்த உத்திரவு கிடைப்பதற்கும் கனம் சபாநாயகர் வழிவகை செய்ய வேண்டும். இதைக் கொடுப்பதிலே ஒன்றும் பயங்கரமான ஆபத்து ஏற்பட்டுவிடாது. திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் நிற்கக்கூடாது என்பதற்காக இவ்வாறெல்லாம் செய்யப்படுகிறது. செகரெட்டேரியேட்டிலே நாங்கள் சென்ற நான்கு நாட்களாகப் பார்த்ததில் இங்கே ஒரு பெரிய புரட்சியே ஏற்பட்டிருக்கிறதோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவரைப் பார்த்தால் பேசாதே இவரைப் பார்த்தால் பேசாதே என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எங்களிடம் ஒன்றும் சொல்லவேண்டாம் பரிகாரம்

22nd January 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கூறுவதற்காக அமைச்சர் அவர்களைப் பார்த்தோம். பயனில்லை. உங்களிடம் தான் முறையிட வேண்டியிருக்கிறது. இதை நீங்கள் தான் தீர்த்து வைக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை நான் ஆமோதிக்கிறேன்.

MR. SPEAKER : The motion is before the House for discussion.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தங்களை ஆதரித்து அதனை வலியுறுத்துகின்ற வகையில் சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் இந்த ஊராட்சி மன்றத் தேர்தல்களில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலைமைகளையும் கஷ்டங்களையும் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். நம்முடைய நாட்டிலே எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் இந்த சின்னங்கள் முறை கொண்டுவரப்பட்டது. சின்னங்களைப் புரிந்துகொண்டு நிற்கிற வேட்பாளர்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு வாக்களிக்கவேண்டுமென்கிற முறையிலே சின்னங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்களுடைய பெயர்களைப் படித்து அறிந்து வாக்காளர்கள் வாக்களிப்பது கஷ்டமாக இருக்குமென்ற காரணத்தால் தங்கள் கண்முன்னால் பார்க்கும் சின்னங்களை வைத்து வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற நோக்கத்துடன் இந்த முறை கொண்டுவரப்பட்டது. இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையைப் பார்த்தால் இடையில் ஒரே ஒரு நாள் தான் இருக்கிறது. அதனால் ஏற்படுகிற கஷ்டங்கள் எப்படியிருக்குமென்பதை கனம் உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலே பத்து அல்லது 12 பேர்கள் நிற்கிறார்கள் என்றால் அதிலே ஐந்து பேர்களை தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், கிடைக்கும் ஒரு நாளில் பத்துச் சின்னங்களையும் எடுத்துக்கொண்டு வீடுவீடாகச் சென்று, வாக்காளர்களை அணுகி, ஒருவர் உள்ளே போக, ஒருவர் நடுவில் நிற்க, ஒருவர் வெளியே நிற்க, இந்த குருவி, கிணறு, குடம்; ஆகியவைகளை 5-30 p.m. அவரவர்கள் கையில் ஏந்திக்கொண்டு போய் ஒரே நாளைக்குள்ளாக அந்தச் சின்னங்களை வாக்காளர்களிடத்தில் அறிமுகப்படுத்தி அதிலே ஐந்து சின்னங்களை நினைவில் வைத்துக்கொண்டு வாக்காளர்கள் ஓட்டளிக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்படும். சட்ட மன்ற, பாராளுமன்ற தேர்தல்களின் போது, சின்னங்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் மக்களிடையில் பரவுவதற்கு காலம் கிடைக்கிறது. பொதுக் கூட்டங்களிலும், தின, வார ஏடுகளிலும், சுவரொட்டிகளிலும் அந்தச் சின்னங்களை விளம்பரப் படுத்த வாய்ப்பு இருக்கிறது. அவ்வளவும் முடிந்ததும் கூட க்யூ வரிசையில் நிற்கும் போதும், மக்களுக்கு சின்னங்களை அறிமுகப் படுத்த வேண்டிய அவசியம் அப்பவும் இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவோம். அப்பொழுதும் கலவரங்களும், தகராறுகளும் ஏற்படுகின்றன என்பது யாவரும் அறிந்ததே.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd January 1965

இரண்டாவதாக, குறைந்த பட்சம் ஒரு வாரகாலம் அவகாசம் கொடுத்தால்தான் சின்னங்களை மக்களிடம் அறிமுகப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே இப்படிப் பட்ட குறைபாடுகளை திருத்துவது மிக மிக அவசியம். அப்பொழுது தான் அந்த அந்த தொகுதியில் இருப்பவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும்.

ஆக இந்த சின்னங்களை மக்களிடையே வேட்பாளர்கள் அறிமுகப்படுத்த ஒரு வாரகாலம் அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இப்படிப் பட்ட குறைபாடுகளை தீர்ப்பதற்காக, திரு. கல்யாணசுந்தரம் கொண்டுவந்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக் கொண்டு, உடனடியாக முயற்சி செய்தால் தான் நன்மை ஏற்படும். இல்லாவிட்டால், திருத்தங்களை அமுலாக்க காலதாமதம் ஏற்படும் என்றால், தேர்தலை ஒரு திங்கள், இரண்டு திங்கள் ஒத்திப் போட்டு, திருத்தங்களைச் செய்து அதன் பிறகு தேர்தலை வைத்துக் கொள்ளலாமா என்று ஆலோசிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் தகராறுகள், சிக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளமுடியும். இன்றைக்குச் சிறு சிறு தவறுகளைத் திருத்தாமல் விட்டால், பின்னால் பெரும் பெரும் தவறுகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஆகவே தேர்தலை ஒத்திவைத்தாவது, முறையாக, செம்மையாக அதைச் செய்ய முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தின் அடிப்படையில் அவர்களும் பேசினார்கள், நண்பர் தர்மலிங்கம் அவர்களும், கனம் எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் பேசினார்கள். மிக்க மகிழ்ச்சி. சாதாரணமாக நாம் மூன்று பொதுத் தேர்தல்களை நடத்தி இருக்கிறோம். அதில் தொகுதிகள், சட்டமன்ற தொகுதிகள் 209 தான். ஆனால் இதில் 60,000 தொகுதிகள் இருக்கின்றன என்றால் அது ஆச்சரியமாக இருக்கும். இது மிக கஷ்டமான பணி. அதற்குப் பல போலிங் ஆபீசர்கள் மற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள். அது சம்மந்தமான பல பிரச்சினைகளிலும் சர்க்கார் தீவிர கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. ரூ. 20, 5 என்றெல்லாம் சொன்னார்கள். அது அச்சுப் பிழையாக இருக்கலாம். மற்றபடி இரண்டு திருத்தங்களில் ஒன்று டாம் டாம் போடுவதைப் பற்றியது. ஏற்கெனவே 10 நாட்களுக்கு முன் டாம் டாம் போடுகிறோம். சட்ட மன்றத் தொகுதியில் ஒரு லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். இங்கே 200 முதல் 500 வரை தான் இருப்பார்கள். அதற்காக டாம் டாம் போட வேண்டும் என்பது அவசியம் இல்லை. முன்னால் இருந்ததற்குக் காரணம் என்ன என்று பார்க்க வேண்டும். அப்பொழுது 'ஷோ ஆஃப் ஹேண்ட்ஸ்', கைதூக்கி தேர்தல் நடந்தது. ஆகவே, அதை கம்பேர் பண்ணிப் பார்க்க வேண்டும். இந்த எலெக்ஷன் ஏக காலத்தில் எல்லா இடங்களிலும் நடக்கும். ஆகவே இதையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்துதான் உத்தரவு போட்டு இருக்கிறோம்.

ஏழு நாள் டைம் வேண்டும் என்கிறார்கள். அதற்கும் அவசியம் இல்லை. அதோடு, இன்றைக்கே தேதி 22; 23-ம் தேதி தேர்தல் நடந்தாக வேண்டும். ஆக இப்பவே ஏழு நாட்கள் இல்லை. எப்படிச் செய்யமுடியும் என்று பார்க்க வேண்டும். அடுத்த தேர்தலுக்கு வேண்டுமானால் யோசிக்கலாம்.

கனம் சபாநாயகர் : இப்பொழுது அது வேண்டாம் என்கிறார்கள். அப்புறம் கொண்டு வாருங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திரு. தர்மலிங்கம் அவர்கள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட ஜி.ஓ. பற்றிச் சொன்னார்கள். அது பரிசீலனையிலிருக்கிறது. பிறகு பதில் வரும் என்று நினைக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சார், 'பதில் வரும்' என்று தான் சொல்லுகிறார்கள். ஜி.ஓ. கேட்டதற்கு . . .

கனம் சபாநாயகர் : காப்பி கொடுப்பார்களா என்றால், முடிந்தால் கொடுப்பார்கள். இல்லாவிட்டால் 'under such and such a rule', the hon. Member cannot get a copy. என்று சொல்லிவிடலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நாங்கள் எலெக்ஷன் கேசுக்குப் போக வேண்டும்.

MR. SPEAKER : We cannot help it.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற செயலாளர் மூலம், அதனுடைய படி வேண்டும் என்று இன்று நண்பகல் நான் ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன். நாளை பதில் வராவிட்டால், இந்தப் பிரச்னையை நாளை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இப்பொழுது தேர்தல்கள் பார்ட்டி பேசிசில் நடக்கவில்லை. அரசியல் கட்சிகள் நேரிடையாகப் பங்கு கொள்ள முடியாது. சிம்பல்கள் சம்மந்தப்பட்டவரை, பார்ட்டி பேசிசில் நடந்தால் அதையெல்லாம் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கும். ஆகவே, இந்த இரண்டு திருத்தங்களுக்கும் அவசியமே இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏற்கனவேயே திரு. கல்யாணசுந்தரம் இதை நிராகரித்து விடுவார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த தேர்தலுக்கு வேண்டுமானால் இதை யோசிக்கலாம். இவற்றை இப்பொழுது ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று கூறி முடிக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அந்த ஜி.ஓ. காப்பி . . .

MR. SPEAKER : That question does not arise. The matter was brought here incidentally. If the hon. Member wants, he can bring forward a motion and if it is permissible, I shall consider it.

The question is—

In the Conduct of Election of Members of Village Panchayats Rules, 1964—

1. In Rule 2—

For sub-rule (4) the following sub-rule shall be substituted, namely :—

" (4) The notice shall be published by beat of drum again in the ward or each of the wards concerned on the day previous to the date fixed for the poll."

2. In Rule 5—

For sub-rule (1) the following sub-rule shall be substituted, namely :—

5. *Presentation of nomination paper* : " (1) Nomination of candidates shall be made in writing on the date and between the hours specified by the Returning Officer in this behalf in the notice under Rule 2 (2), such date being not later than seven days previous to the date fixed for poll ".

The amendments were put and lost.

5-30 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

X.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

85. *Notification issued with G.O. Ms. No.* 2268, *Rural Development and Local Administration, dated* 28th *October* 1964, *regarding intention to constitute as a Municipality with the name Pattukkottai, the area now within the jurisdiction of the Pattukkottai Town Panchayat in the Thanjavur district.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

B.—Reports, Notifications and other papers—Nil.